# உடன்பிறப்பே...

47

**தி. மு. கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவு கூர்ந்து வருகிறோம். அந்த வகையில் பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாக பயணித்துக் கழகம் வளர்த்த புலவர் குழந்தை அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்..**



ஓவியம் : ரவி பேலட்

# புலவர் குழந்தை: சிந்தனைத் தீ வளர்த்த 'ஆசிரியர்'

'இந்தி தெரியாது போடா' என்கிற வாசகம் பொறிக்கப்பட்ட ஆடை, கழகத்தின் அரசியல் பேசும் கருவியாக மாறியதை அறிவோம். 1950-ஆம் ஆண்டுகளில் அதேபோன்ற ஓர் இயக்கத்தை முன்னெடுத்து, "தமிழ்நாடு தமிழருக்கே" என வேட்டி, துண்டுகளில் அச்சடித்து வழங்கியவர் நமது முன்னோடி புலவர் குழந்தை.

அவர் பேரறிஞர் அண்ணா அவர்களை விடவும் வயதில் மூத்தவர். எனினும் அண்ணாவின் தலைமையை ஏற்றுச் செயல்பட்டவர். கலைஞர் விரும்பிய, கலைஞரை நேசித்த, கலைஞரின் மூத்த உடன்பிறப்பாக நாம் கொண்டாட வேண்டியவர் புலவர் குழந்தை.

## இராவணக் காவியம்

புலவர் குழந்தை அவர்களின் கொள்கை உறுதியினை எளிதாக அடையாளம் சுட்ட வேண்டுமெனில், அவரின் இலக்கியப் பங்களிப்பில் இருந்து 'இராவணக் காவியம்' முன்நிற்கும். ஆரியப் பண்பாட்டுக்கு எதிராக திராவிடக் கலைச் செயல்பாடுகளை நமது முன்னோடிகள் தீவிரமாக முன்னெடுத்த காலத்தில், கம்ப இராமாயணம் நூலுக்கு மாற்றாக, இராமாயணக் கதையைக் கொண்டே இராவணனை கதைத் தலைவனாகக் கொண்டு 'இராவணக் காவியம்' என எழுதினார். புராணக் கதையைப் புறக்கணித்து, பகுத்தறிவு வாதத்துடன், 1946-ஆம் ஆண்டில் அந்த நூல் வெளியானபோது பெரும் எதிர்ப்புகள் எழுந்ததால் தடை செய்யப்பட்டது.

1950-ஆம் ஆண்டுகளில் கழக மேடைகளில் 'இராவணக் காவியம்' நாடகமாக மாற்றம் கண்டபோது, அதற்கும் தடை விதிக்கப்பட்டது. அந்தத் தடைகளும் மீறப்பட்டது தனிக் கதையாக விரியும். அந்தத் தடை, 23 ஆண்டுகளுக்குப் பின்னர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் 1971 -ஆம் ஆண்டு விலக்கிக் கொள்ளப்பட்டுப் புலவரின் தமிழ் முழக்கம் உரிமையாக்கப்பட்டது.

## புலவர் பட்டமும் ஆசிரியப் பணியும்

1906-ஆம் ஆண்டில், ஜூலை 1-ஆம் தேதி, ஈரோடு மாவட்டத்தில், ஓலவலசு என்கிற ஊரில் பிறந்தவர் புலவர் குழந்தை. பெற்றோர் முத்துசாமி-சின்னம்மையார். குழந்தைசாமி என வைக்கப்பட்ட பெயரைப் பின்னாட்களில் குழந்தை எனக் குறிப்பிட்டுக் கொண்டார். திண்ணைப் பள்ளிக்குப் பின், ஈரோடு லண்டன் மிஷன் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, 1934-ஆம் ஆண்டில், திருவையாறு சென்று புலவர் பட்டம் பெறுவது வரை தொடர்ந்தது.

தொடக்க காலத்தில் பக்திப் பாடல்களை எழுதிய குழந்தை அவர்களின் இருபதாவது வயதில் சுயமரியாதை இயக்கத் தொடர்புகள் கிடைக்கின்றன. அதன் பின்னர் திராவிடர் கழக அரசியலாளராக அறியப்பட்டவர். இவர் ஆசிரியர் பயிற்சி முடித்த காலத்தில், இவரது ஊர் மக்கள் படிப்பறிவு இல்லாதவர்கள் என்பதால், ஊரில் உள்ள இளைஞர்களுக்குக் கல்வி கற்பித்தல், கையெழுத்துப்போட கற்றுக் கொடுப்பது, அவர்களின் மூடநம்பிக்கைகளை அகற்றுவதற்கான பணிகளையும் கடமையாகக் கொண்டார். அந்தச் செயல்கள் அனைத்தும் அவருக்குப் பெரியாரின் பெரும் சீடர், கருப்புச் சட்டைக்காரர் என்கிற அடையாளத்தைக் கொடுத்தன.

ஆசிரியராகப் பணியைத் தொடங்கி சுமார் 40 ஆண்டுகள் பணியாற்றியதுடன், அதேகாலத்தில் கழகச் செயல்களிலும் தீவிரமாகச் செயல்பட்டார்.

## மொழிப் போராட்டங்கள்

'வேளாளன்', 'தமிழ்ஓசை' என்கிற இதழ்களை நடத்தியதுடன் சீர்திருத்தத் திருமணம், மறுமணம் ஆகியவற்றை முன்னின்று நடத்திப் பெயர் பெற்றவர். தனது புலமையாலும், புதுமை முயற்சிகளாலும் பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோரின் நட்பு கிடைக்கப் பெற்றவர். அண்ணாவும் குழந்தை அவர்களும் ஈரோட்டிலேயே அறிமுகமானவர்கள். அண்ணா, 'விடுதலை'யில் பணியாற்றிய காலத்தில் குழந்தை அவர்களைப் 'புலவர்' என்றே அழைத்துள்ளார்.

1938-ஆம் ஆண்டில் பெரியார் முன்னெடுத்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்களின்போது தமிழறிஞர்களுடன் இணைந்து இந்தி எதிர்ப்புப் போரில் களம் கண்டவர் குழந்தை. மொழிப்போர் களத்தில் 1948-ஆம் ஆண்டு, 1965-ஆம் ஆண்டுப் போராட்டங்களின்போதும் அதே தீவிரத்துடன் இயங்கியவர் குழந்தை அவர்கள்.

## ஆடைகளில் முழக்கம்

ஆடைகளில் கழகத்தின் பிரச்சார முழக்கத்தை முன்னெடுத்தவர் புலவர் குழந்தை. "தமிழ்நாடு தமிழருக்கே" என அச்சு தயாரித்து, அதை நெசவாளர்களிடம் அளித்து வேட்டி துண்டுகளில் அச்சடித்துக் கொடுத்து அவற்றை விற்கத் தூண்டினார். அதன்மூலம் மொழிப்போர்க் களத்தில் புதிய வடிவத்தை அப்போது நிகழ்த்திக் காட்டியவர்.

1948 ஆம் ஆண்டு, சென்னையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டின்போது, தந்தை பெரியாரின் கோரிக்கைக்கு ஏற்ப, திருக்குறளுக்கு உரை எழுத நாவலர் சோமசுந்தரப் பாரதியார் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவில் இருந்த புலவர், அடுத்த 25 நாட்களில் குறளுக்கு உரை எழுதி முடித்தார். பெரியார் முன்னெடுத்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு 'தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்' என்கிற நூலை எழுதி, எழுத்துச் சீர்திருத்தத்தை முன்னெடுத்தவர் குழந்தை.

**கழகத்தின் புரட்சிப் புலவராக இருந்தாலும் குழந்தை அவர்கள், அமைதியும் அடக்கமும் எளிமையான வாழ்க்கையும் கொண்டவர்.**

திராவிட இயக்கத்தின் கொள்கைகளைப் பேசும் கலக இலக்கியம் படைத்த குழந்தை அவர்கள், தமிழ் இலக்கண நெறிகளை விளக்கும் நூல்களையும், திருக்குறள் உள்ளிட்ட நூல்களுக்கு உரை விளக்கமும் எழுதியுள்ளார். இவர் படைத்த 29 நூல்களும் தமிழர்களின் இழிவைப் போக்கும், ஏற்றத்தைப் பேசும்.

பள்ளிக்கு வெளியே பகுத்தறிவுப் பிரச்சாரம் என்றாலும், ஆசிரியராகப் பக்திப் பாடல்களை இலக்கிய நயத்துடன் நடத்துவார் எனப் பெயர் எடுத்தவர். தீரன் சின்னமலை குறித்து முதன்முதலில் நூல் எழுதி, அவர் வரலாற்றை வெளிக் கொண்டு வந்தவர் குழந்தை அவர்கள்தான்.

1971-ஆம் ஆண்டில் விழுப்புரத்தில், பகுத்தறிவுக் கழகத்தின் சார்பில் புலவரைப் பாராட்டி விழா எடுத்தபோது, சிறப்புரையாற்றியவர் தந்தை பெரியார். "தமிழ்ப் புலவர்கள் எல்லாம், தமிழர்களை இழிவுபடுத்தும் காவியங்களைப் பாடிய நிலையில், புலவர் குழந்தை தமிழரின் இனமானம் காக்கும் இலக்கியம் படைக்கிறார்" எனப் பாராட்டி பொன்னாடை போர்த்தினார்.

## விடுதலை கீதம்

"செந்தமிழ்க் குழந்தை செப்பினான் அறிவுலகு ஒப்புமாறே" எனக் குழந்தையைப் பாராட்டினார் பாரதிதாசன். அறிஞர் அண்ணாவோ, "பழமைக்குப் பயணச்சீட்டு; புதுமைக்கு நுழைவுச்சீட்டு: தமிழரசுக்குக் கால்கோள்; விடுதலை கீதம் இசைக்கும் வாணர்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

1971-ஆம் ஆண்டு, இராவணக் காவியத்தின் இரண்டாவது பதிப்புக்கு, அப்போதைய முதலமைச்சர் கலைஞர் எழுதிய அணிந்துரையில், புலவர் குழந்தைக்குப் பொன்மகுடம் சூட்டினார்.

"பன்னீராயிரம் பாடிய பாட்டரசன் கம்பன் எழுப்பாத இன்றமிழ் உணர்வை எழுப்பியவர், தமிழன் அருமையை - இனிமையை - ஏற்றத்தை - பெருமையை -தனிப் பெருந்தன்மையை உணர்த்தியவர். கம்பனின் இராமாயணத்தை இராவணக் காவியமாக மாற்றியமைத்ததன் மூலம் செந்தமிழ்ப் பெருமக்களின் சிந்தனைத் தீயை நெய்யூற்றி வளர்த்தவர் புலவர் குழந்தை!" என எழுதி இருப்பார்.

## கழகத்தின் உரம்

கழகத்தின் புரட்சிப் புலவராக இருந்தாலும் குழந்தை அவர்கள், அமைதியும் அடக்கமும் எளிமையான வாழ்க்கையும் கொண்டவர். தான் இருந்த காலம் வரை பகுத்தறிவுக்கு ஒவ்வாத எதனையும் செய்யாதவர். ஆரிய இலக்கியங்களுக்கு எதிராகப் பெரும் எழுத்துப் போரை நிகழ்த்திய புலவர் அவர்கள் 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் 22-ஆம் தேதி மறைந்தார்.

கழகத்தின் பெரும்புலவர் குழந்தையின் நினைவை மறக்காத கலைஞர், புலவர் குழந்தையின் நூற்றாண்டு நிறைவு நாளன்று அவரது நூல்களை நாட்டுடைமையாக்கி மரியாதை செய்தார். பகுத்தறிவுக் கொள்கைப் பாசறையில் உருவாகி, கழகத்தின் உரமாக நின்ற புலவர் குழந்தையின் நினைவு 'இராவணக் காவியம்' போல என்றும் உயர்த்திப் பிடிக்கப்படும்.

**...துடிக்கும்**

## தனித்த அடையாளம்!



தமிழ்த் திறனாய்வு உலகில் தனித்த அடையாளமாகத் திகழ்பவர் பேராசிரியர் க.பஞ்சாங்கம். அவருக்கு இந்த ஆண்டு 75 வயது என்பதையொட்டி சிறப்பிதழை வெளியிட்டுள்ளது 'வையம்' இலக்கிய மாத இதழ்.

இலக்கியம் போலவே திறனாய்வு என்பதும் ஒரு அரசியல் செயல்பாடு என்பதைப் புரிந்து கொண்டதால், படைப்பாளிகள் எப்போதும் ஒடுக்கப்பட்டவர்கள் பக்கமே இருக்க வேண்டும் என திறனாய்வுகள் வழியே நிரூபித்து வந்தவர் பேராசிரியர் பஞ்சாங்கம்.

தமிழியம், திராவிடம், மார்க்சியம், தலித்தியம் என எல்லா கோட்பாட்டு அரசியலையும் மக்களின் பார்வையில் அணுகியதுடன், தனது திறனாய்வுகளிலும் அதை வெளிப்படுத்தியவர். பல இதழ்களில் அவர் குறித்த சிறப்புக் கட்டுரைகள் வந்தாலும், வையம் தொகுப்பு விரிவான வாசிப்புக்கு உகந்ததாக உள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



மேகநாதன்



### தலைமையின் உறுதி!

1993-ஆம் ஆண்டு கழகம் நெருக்கடியைச் சந்தித்தபோது வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் கழகம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையின் கீழ்தான் இயங்குகிறது என்பதை உறுதி செய்ய அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்களை அழைத்து, இரு வண்ணக் கொடியேற்றி பொதுக் கூட்டம் நடத்தினோம். இதனோடு இணைந்து சென்னையில் வெற்றிகரமாக நடந்து முடிந்த சமூகநீதிப் பேரணிக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாகவும் இது அமைந்தது. உடன் அன்றைய வேலூர் மாவட்டச் செயலாளர் முகமது சகி அவர்களும் கிளைக் கழகச் செயலாளராக இருந்த நானும் இப்படத்தில் இருக்கிறோம்.

**-எஸ்.மேகநாதன்,**
**தலைமைக் கழகப் பேச்சாளர்,**
**திருப்பத்தூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### சோதிடம் அன்றும் பொய்த்தது!

1969 ஏப்ரலில் நகராட்சித் தேர்தல்களை நடத்த நாள் குறித்தது கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு. அண்ணா மறைந்த பிறகு நடந்த முதல் தேர்தல். காமராசர், சி.சுப்பிரமணியம் போன்ற காங்கிரஸ் தலைவர்கள் தி.மு.க.வுக்கு எதிராக சுற்றிச்சுழன்று பரப்புரை செய்தனர். ஆனால், மொத்தமுள்ள 73 நகராட்சிகளில் 47-இல் தி.மு.கழகமும், கூட்டணிக் கட்சிகள் 3 இடங்களிலும் வென்றன. அண்ணா மறைந்த பிறகு தி.மு.க. சிதறிவிடும் என்ற சோதிடம் பொய்த்தது என எழுதியது 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஊடகம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

405

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131